பக்கங்கள் 23+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 11 வெள்ளிக்கிழமை 26.12.2025 | அதிர்வு 149

## தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்தோருக்கு மாற்றுக்காணிகளே தீர்வு!

அரசு திட்டவட்டம்



யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்த பொதுமக்களுக்கு 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# ஆழிப்பேரலையின் ஊழித்தாண்டவம்: நாடெங்கும் நினைவேந்தல் நிகழ்வுகள்

### கதறியழுதவாறு தமது சொந்தங்களை அஞ்சலித்த உறவுகள்

(எஸ்.நிதர்ஷன்)

சுனாமி எனும் ஆழிப்பேரலையின் ஊழித்தாண்டவத்தின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நாடு முழுவதும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

பிரதான நினைவேந்தல் நிகழ்வு காலி மாவட்டத்தின் பெரலிய சுனாமி நினைவுத்தூபியில் காலை 02



### ஒற்றையாட்சி திணிக்கப்பட்டால்

# தமிழீழப் போராட்டம் மீண்டும் வெடிக்கும்!

### அன்புமணி அதிரடி எச்சரிக்கை

ஒற்றையாட்சி முறைமையைத் திணிக்க இலங்கை அரசு எடுக்கும் எந்தவொரு முயற்சியும் புதுப்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு வழிவகுக்கும் என்று தமிழகக் கட்சி ஒன்று எச்சரித்துள்ளது.

எனவே, தமிழர்களுக்கு அர்த்தமுள்ள சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஆழிப்பேரலையின் ...**

8.30 மணிக்கு ஆரம்பமாகியது.

சுனாமிப் பேரழிவில் கொல்லப்பட்டவர்களை நினைவேந்தும் விதமாக இன்று காலை 9.25 மணி முதல் 9.27 வரை நாடு முழுவதும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு அதிகளவு மக்கள் உயிரிழந்த வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் படங்களுக்கு மாலையிட்டு தீபங்கள் ஏற்றி உணவுகளைப் படையலிட்டு உறவுகள் கதறியழுதவாறு தமது சொந்தங்களை அஞ்சலித்தனர்.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி நாட்டைத் தாக்கிய சுனாமி பேரழிவில் 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்து 411 பேர் காயமடைந்தனர்.

ஆழிப்பேரலை நாட்டின் 14 மாவட்டங்களைத் தாக்கியது. இதில், வடக்கு, கிழக்கு மாகாணங்களே அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டன.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்று சுமாத்திரா தீவுக்கு அண்மையாக கடலில் 9.3 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டது.

இலங்கை, இந்தியா, இந்தோனேசியா உட்பட 6 நாடுகளைத் தாக்கிய இந்த ஆழிப்பேரலையால் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 167 பேரின் மரணம் உறுதிப்படுத்தப்பட்டது. 43 ஆயிரம் பேர் வரை காணாமல்போயினர் அல்லது அவர்களின் மரணம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



















# கொழும்பில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இளைஞர் உயிரிழப்பு!

கொழும்பில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - கொ/ஹவலை பகுதியில் கடந்த 22 ஆம் திகதி ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி, களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், ஓட்டோவை இலக்கு வைத்து கைத்துப்பாக்கியால் 3 தடவைகள் சுட்டுவிட்டுத் தப்பியோடினர்.

இந்தத் தாக்குதலில் இளைஞரின் வலது கை மற்றும் வயிற்றுப் பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன.

உயிரிழந்த இளைஞர், தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் "அவிஷ்க" என்ற போதைப்பொருள் கடத்தல்காரரின் நெருங்கிய சகா என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் அவிஷ்கவின் நிதி விவகாரங்களை மேற்படி இளைஞரே கையாண்டு வந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூடு மற்றுமொரு போதைப்பொருள் கடத்தல்காரரான 'பெடோவிட்ட அசங்க' என்பவரின் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'பெடோவிட்ட அசங்க'வின் ஆலோசனையின் பேரில் 'சாண்டோ' எனப்படும் நபரால் இந்தத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசார ;ணைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### காணிகளை...

மாற்றுக்காணிகளைப் பெற்றுக்கொடுப்பது அல்லது இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பதே அரசின் நிலைப்பாடு என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தையிட்டி திஸ்ஸ விகாரையானது தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்கின்றோம். ஆனால், குறித்த விகாரை எமது ஆட்சிக் காலத்தில் அமைக்கப்படவில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால், அரசு என்ற வகையில் இந்தப் பிரச்சினையை நீடிக்காமல் முடிவுறுத்தவே எதிர்பார்க்கின்ற நிலையில் விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு உரிய மாற்றுக்காணிகளை வழங்குவது அல்லது தற்போதைய சூழ்நிலைக்கேற்றவாறு அவர்களுக்கான இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பதே எமது அரசின் நிலைப்பாடு.

இழப்பீடு அல்லது மாற்றுக்காணிகளை வழங்குவதற்குக் கூட எத்தனை பேரிடம் ஆவணங்கள் சரியாக இருக்கின்றன என்பது ஒருபுறம் இருக்க குறித்த பிரச்சினையை அரசியல் ரீதியாக மாற்றிக் கொண்டு செல்கின்றார்கள்.

நாட்டின் மூவினங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது அரசு பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மதம் மற்றும் இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்க முயற்சிக்கக்கூடாது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காகக் காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக்காணிகளே பெற்றுக் கொடுக்கப்படும். இந்த நிலைப்பாட்டில் அரசு திடமாக இருக்கின்றது." - என்றார்.

### தமிழீழப் போராட்டம்...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளின் சில தலைவர்கள், ஒற்றையாட்சி முறைமையை வலுப்படுத்தும் நோக்கில் அரசமைப்புத் திருத்தங்களைத் திட்டமிட்டு வருகின்றனர். இது, சிங்கள பெரும்பான்மைவாதத்தை மேலும் ஊக்குவிக்கும்.

இரண்டு தேசிய இனங்கள் வசிக்கும் நாட்டில் இதுபோன்ற நடவடிக்கைகள் ஆபத்தானவை மற்றும் கண்டிக்கத் தக்கவை.

1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பதன் மூலம் தமிழர்களுக்கு சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பைக் கருத்தில்கொண்டதாக்கும்.

இருப்பினும், இலங்கை அரசு இதைத் தொடர்ந்து செயற்படுத்த மறுத்து வருகின்றது.

13 ஆவது அரசமைப்பு திருத்தம், தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்குப் பதிலாக, அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் குறைத்து விட்டது.

விடுதலைப்புலிகள் இல்லாத நிலையிலும், தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மூல காரணங்கள் நீடிக்கின்றன.

இந்தநிலையில், சுயாட்சியை நிரந்தரமாக மறுக்கும் எந்தவொரு அரசமைப்பு மாற்றமும் ஈழத் தமிழர்களிடையே அடக்கப்பட்ட விடுதலை உணர்வுகளை மீண்டும் தூண்டிவிட்டு இலங்கையின் எதிர்காலத்துக்குத் தீங்கு விளைவிக்கும்." - என்றுள்ளது.

# அமைச்சர் நளிந்த - வியட்நாம் தூதுவர் சந்திப்பு!



சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ வுக்கும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் திருமதி டிரின் தி டாமுக்கும் இடையேயான சந்திப்பு நேற்று மாலை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சில் நடைபெற்றது.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான தற்போதைய இராஜதந்திர உறவுகள் மற்றும் எதிர்காலத்தில் அந்த உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் வியட்நாமின் உதவியுடன் இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் சுகாதார சேவையின் தற்போதைய செயற்பாடு, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தேவைகள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் ஊடகம் மற்றும் தகவல் தொடர்புத் துறைகளில் இலங்கையுடனான வியட்நாமின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது குறித்தும் தூதுவர் தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளின் முக்கிய அம்சங்களை நினைவுகூர்ந்த சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, எதிர்காலத்தில் வியட்நாமுக்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான அரசியல், இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை கட்டியெழுப்ப விரும்புவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் தூதுவர் சுட்டிக்காட்டினார்,

மேலும் அரசியல், கலாசாரம் மற்றும் பொருளாதாரம் உட்பட அனைத்து துறைகளிலும் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து தனது மகிழ்ச்சியை அவர் வெளிப்படுத்தினார்.

1970 இல் இருந்து 55 ஆண்டுகளாக வியட்நாமும் இலங்கையும் வலுவான உறவுகளைப் பேணி வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுகாதார செயலாளர் நிபுணர் அனில் ஜாசிங்கே, வியட்நாம் தூதரகத்தின் துணைத் தலைவர் லு வான் /ஹவோங், தூதுவரின் செயலாளர் ரம்யா நிலாங்கனி ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# முகாமையாளர் சுட்டுக்கொலை: 6 சந்தேகநபர்கள் சிக்கினார்கள்!

அம்பலாங்கொடை பகுதியில் வர்த்தக நிறுவன முகாமையாளர் ஒருவர் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினராலும், நான்கு பேர் காலி குற்றப் பிரிவினராலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தச் சோதனைகளின் போது ஹிக்கடுவ பகுதியில் இருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் ஒரு ரிவால்வரும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### பயங்கரவாதத்தில் இருந்து

# அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டவரைவை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவேன்!

### முன்னாள் நீதி அமைச்சர் அதிரடி அறிவிப்பு

"பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தை நாடுவேன்." – என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலீடாகவே மேற்படி சட்டம் கொண்டு வரப்படவுள்ளது.

பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாப்பது தொடர்பான உத்தேச சட்ட வரைவு முன்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொதுமக்களிடம் கருத்து கோரப்பட்டுள்ளது. இது குறித்து எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணியான அவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியை தற்போது வகிக்கின்றார்.

மேற்படி விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததன் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசியல் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டுவந்தது.

அடக்குமுறைக்காகவும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. இதன் பின்னரே, பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து உருவாகியது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இருந்து அழுத்தங்கள் வந்தன.

நல்லாட்சியின்போது 2015 முதல் 2019ஆம் ஆண்டு வரை உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள்



சம்பவம் இடம்பெறும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2022 ஆம் ஆண்டு இடைக்கால அரசில் நீதி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

அதற்கமைய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றம் சென்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை உருவாக்கக் கூடாது என்று கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைக் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளும் சிவில் அமைப்பினரும் ஏற்றுக்கொண்ட போதும், தேசிய மக்கள் சக்தியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அநுரகுமார திஸாநாயக்க தனது தேர்தல் அறிக்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வதாகக் குறிப்பிட்டிருந்தார்.

நல்லாட்சியில் தயாரிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் உள்ளடக்கத்துக்கு அப்பாற்பட்ட வகையில், பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது சட்டமானால் அரசமைப்பால் உறித்தாக்கப்பட்டுள்ள தனிமனித சுதந்திரம் பாரிய அச்சுறுத்தலை எதிர்கொள்ளும்.

எனவே, மேற்படி சட்டவரைவை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவேன்." – என்றார்.

பொதுமக்களிடம் கருத்து கோரப்பட்டு, அது சட்டமூலமாக வெளியாகி, முதலாம் வாசிப்புக்கென நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பின்னரே, உயர்நீதிமன்றத்தை நாடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சு.கவின் தலைமைப் பதவியில் உடனடியாக மாற்றம் வேண்டும்

### தயாசிறி எம்.பி. வலியுறுத்து



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் மிகவும் அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் அந்தக் கட்சியைக் கட்டியெழுப்ப முடியாது என்றும் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போது அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது மூன்று அணிகளாகப் பிளவுபட்டிருந்தன. நிமல் சிறிபாலடி சில்வா அணி, தயாசிறி தரப்பு மற்றும் மைத்திரி குழு எனப் பிரிந்து செயற்பட்டு வந்தனர்.

இந்நிலையில் நிமல் சிறிபாலடி சில்வா அணியும், மைத்திரி தரப்பும் இணைந்துள்ளன. இதனையடுத்தே விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டது.

எனினும், தான்தான் கட்சியின் சட்டபூர்வமான செயலாளர் என்று தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுவருகின்றார்.

விஜயதாச ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட நியமனத்தையும் அவர் சவாலுக்குட்படுத்தியுள்ளார். இந்நிலையிலேயே தலைமைப் பதவியில் மாற்றத்தை வலியுறுத்தியுள்ளார் தயாசிறி ஜயசேகர எம்.பி.

"கிராமிய மட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விழுந்துள்ளது. தலைமைத்துவ மாற்றம் இன்றி அதனைக் கட்டியெழுப்ப முடியாது." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்தலைமைப்பதவியைத்தனக்கு வழங்குமாறும் அவர் யோசனை முன்வைத்தார்.

தவிசாளர் பதவியை நிமல் சிறிபால டி சில்வாவுக்கு வழங்க முடியும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.



# கடலில் மூழ்கி வைத்தியர் மரணம்!

கடலில் மூழ்கி வைத்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிரிஸ்ஸகடலில்நேற்றுநீராடிக்கொண்டிருந்த வைத்தியரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வெலிகம – வலான பகுதியில் உள்ள வைத்தியசாலையில் பணியாற்றும் 49 வயதுடைய தலைமை வைத்தியரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி வைத்தியர் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது, கடலலையில் இழுத்துச் செல்லப்பட்டார். பிரதேச மக்கள் ஒன்றிணைந்து அவரை மீட்டு மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த வைத்தியர் ஒரு மாதத்துக்கு முன்பே மாத்தறை வைத்தியசாலையில் பணிபுரியத் தொடங்கினார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.



# மோட்டார் சைக்கிள் பந்தயம்: 7 இளைஞர்கள் மடக்கிப் பிடிப்பு

பணத்துக்காக மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாணந்துறை வடக்கு பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் மொரட்டுவை, ஏகொட–உயன மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18, 19, 20, 21 மற்றும் 22 வயதுடையவர்கள் எனப் பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பழைய காலி வீதியில், இரவில் மோட்டார் சைக்கிள் பந்தயங்கள் நடத்தப்படுகின்றன எனவும், இதனால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகின்றது எனவும் அப்பகுதி மக்கள் அளித்த முறைப்பாட்டையடுத்து, பாணந்துறை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பழைய காலி வீதியில் உள்ள ஜுபிலி சந்தியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது, 4 மோட்டார் சைக்கிள்களுடன் 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் பந்தயங்களின் போது அடையாளம் காணும் வகையில் சைலன்சர்கள் வெட்டப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளன எனவும், இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இது தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது!

நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 29 ஆயிரத்து 539 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 179 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 88 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 322 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 36 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 414 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இரத்தக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு!

இரத்தக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம், மிஹிந்தலை – புதுக்குளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மிஹிந்தலை பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீரில் மூழ்கிய குடும்பஸ்தரின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட போது ஓடும் நீரில் தவறி விழுந்து மூழ்கி உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் யைளிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உள்ளாறுக்கட்டு பகுதியில் விவசாய நடவடிக்கைக்காக சென்ற நிலையில் அந்தப் பகுதியில் உள்ள பாலத்தில் இருந்து தவறி விழுந்து விவசாயியான குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பசளை ஏற்றிக் கொண்டு வயலுக்குச் செல்லும் வழியில் பாலத்தின் ஊடாக பயணித்த போது தவறுதலாக ஆற்றில் விழுந்த நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.



உள்ளாற்றுக்கட்டு பகுதியில் வான் கதவின் ஊடாக வெள்ள நீர் வெளியேறி வருகின்ற நிலையில் சடலமானது கலிங்கத்தொட்டியில் சிக்கி காணப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலத்தை தேடுவதற்கு அப்பகுதிக்கு நீர்பாசன திணைக்களத்தின் உதவி பெறப்பட்டிருந்தது. அத்துடன் அப்பகுதிக்கு வருகை தந்த நீர்பாச திணைக்களத்தினர் வான்கதவுகளை மூடி வெள்ள நீரை குறைத்த போது கலிங்கத்தொட்டியில் சிக்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல் ஜவாஹிர் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் நீரில் மூழ்கிய மையால் மூச்சு திணறல் ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளது என்று தெரிவித்தார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் நிந்தவூர் 06 தெற்கு வீதி பகுதியில் வசித்து வந்த 63 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான இஸ்மாலெப்பை இப்றாகீம் ஆவார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கூறு கெட்ட தலைவர்கள்

கடந்த ஏழரை தசாப்தங்களுக்கு மேல் இலங்கைத் தீவில் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு, அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு வருகின்ற சிறுபான்மையினரான தமிழர்கள் குறித்து சிங்களத் தலைவர்கள் பொறுப்பின்றியும், நிலைமை புரியாமலும் பேசுகின்றமையையே வழமையாகக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில்தான் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க கருத்து வெளியிட்டிருக்கிறார் போலும்.

ரணில் விக்கிரமசிங்க - சஜித் பிரேமதஸ ஆகியோர் ஒன்றிணைந்த பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அந்த அணியில் இணையும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்கா இப்போது நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அவர் நிதர்சன உலகில் இருந்து பேசுகிறாரா - யதார்த்தத்தை உணர்ந்து உரைக்கின்றாரா - என்ற சந்தேகம் வருகின்றது.

இந்த இருவரும் கடைசியாக ஆற்றிய செயற்பாடுகள் அவர்களை தமிழினத்திலிருந்து எங்கேயோ தள்ளி வைத்து விட்டன என்பதுதான் உண்மை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிர்ஷ்டமாகக் கிடைத்த சுமார் இரண்டரை ஆண்டு கால ஜனாதிபதி பதவியின் முடிவில் அவர் தமிழ் மக்களின் முதலில் குத்தி விட்டு ஒய்ந்தார் என்பதை தமிழர்கள் மறைக்க - மறக்க - மறுக்க - தயாராக இல்லை.

அவரது அதிபர் பதவியின் கடைசிக் காலத்தில், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டம் எல்லா நிலைகளிலும் நிறைவேற்றப்பட்டு, மூன்றாவது வாசிப்பில் அது நிறைவேற்றப்படுவதான இறுதி அறிவிப்பு மாத்திரம் நாடாளுமன்றத்தில் எஞ்சியிருந்தது. அப்போதைய நாடாளுமன்றின் கடைசி அமர்வில் அதற்கு இரண்டு நிமிடங்கள் ஒதுக்கி இருந்தால் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்திருக்கும். மாகாண சபை தேர்தல்களும் இவ்வளவு காலத்துக்குள் நடந்து முடிந்திருக்கும்.

ஆனால், நடைபெறவிருந்த ஜனாதிபதி தேர்தலில் தன்னை ஆதரிக்கும் முடிவை இலங்கைத் தமிழரசு கட்சி அறிவிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் அந்த மாகாண சபை தேர்தல் சட்டம் மூன்றாவது வாசிப்பிலும் அங்கீகரிக்கப்படுகின்றது என்று இரண்டு நிமிட நேரம் சபாநாயகர் அதற்கு ஒதுக்கி அறிவிப்பதற்கு இடம் அளிக்காமல் முதுகில் குத்தியவர்தான் இந்த ரணில் விக்கிரமசிங்க. தமிழர்களின் இந்த நீண்ட நெடிய போராட்டத்தின் மிச்ச சொச்சமாக எஞ்சிய மாகாண சபை அதிகாரப் பரவலையும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் பயன்படுத்த விடாமல் தடுத்த பிரகிருதிதான் இந்த ரணில் விக்கிரமசிங்க.

அதுபோல, அண்மையில் திருகோணமலை நகரின் அடாத்தாகப் புத்தர் சிலை நிறுவப்பட்ட போதும், அது முதலில் அகற்றப்பட்ட சமயம் சஜித் பிரேமதாஸ கிளர்ந்தெழுந்து நாடாளுமன்றத்தில் கர்ஜித்த பௌத்த - சிங்களப் பேரினவாத வெறித்தனப் பேச்சு தமிழ் மக்களின் மனதில் ஆழமாக பதிந்த பேரின மேலாண்மை அட்டகாசமாகும்.

இத்தகைய இரண்டு பிரகிருதிகளின் அரசியல் இணைவு குறித்து தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. அவர்களோடு தமிழ் மக்களின் கட்சிகளும் சேர்ந்து செய்யப்பட போவதில்லை. வேறு வழியின்றி மலையகத் தமிழ் கட்சிகள் 'உள்ளவற்றுள் வள்ளிசு' என்ற கணக்கில் இந்த சஜித் - ரணில் இணைவைக் கவனத்தில் எடுக்கலாம். ஆனால் வடக்கு, கிழக்கு தமிழர்களும் அவர்களின் கட்சிகளும் தமது முதுகில் குத்திய இந்தப் பேரினத் தலைவர்களுக்குப் பின்னால் இனியும் இணைந்து செயல்படத் தயாராக இல்லை என்பதுதான் உண்மை.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலைச்சேனைக்கு உதவி!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

மதுரங்குளி பாலைச்சேனை கிராமத்தில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு கிறிஸ்மஸ் கால நிவாரண உதவியாக MUSLIM CHARITY நிறுவனத்தினால் உலர் உணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வெள்ள அனர்த்தத்தால் பல குடும்பங்கள் வேலை வாய்ப்பு மற்றும் வருமான இழப்புகளுக்கு உள்ளாகி பல்வேறு பொருளாதார பாதிப்புக்களை சந்தித்தனர். அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் பண்டிகையை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு உதவியாக முஸ்லிம் சேரிட்டி இலங்கை அமைப்பு இந்த மனிதநேயம் சார்ந்த உதவிகளை வழங்கியது.

முஸ்லிம் சேரிட்டி இயக்குநர் முஜாஹித் நிசார் தலைமையில் நடைபெற்ற இந்த உதவி வழங்கும் நிகழ்வை சமாதான நீதிவான் ஜலீல் ஒருங்கிணைத்தார்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹ்யா, நல்லந்தலுவா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் சமூக முன்னணி உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

மேலும் MUSLIM CHARITY இலங்கை அமைப்பு தொடர்ந்து தேவையுள்ள மக்களுக்கு உதவி செய்யும் முனைப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.






# வவுனியா அறநெறிப் பாடசாலைகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல உதவிகள்

வவுனியா – செட்டிகுளம் ஞானப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சிதம்பரபுரம் திருப்பழனி அறநெறிப் பாடசாலை, முதலியார்குளம் வேல் முருகன் அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் 146 மாணவர்களுக்கு 22 லட்சத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தின் பல பகுதி களை சேர்ந்த 10 அறநெறிப் பாட சாலையில் கல்வி கற்பிக்கும் 30 ஆசி ரியர்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயி ரம் ரூபா பெறுமதியான அத்தியவசிய மான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் தொண்டர்களூடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர் கள், நிர்வாகிகள், மாணவர்களின் பெற் றோர்கள் என பலர் கலந்து கொண்ட னர்.















# உடுப்பிட்டி இளந்தளிர் முன்பள்ளியின்
# கலை நிகழ்வும் கௌரவிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், வடமராட்சி, உடுப்பிட்டி தெற்கு, இளந்தளிர் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வும் கௌரவிப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

உடுப்பிட்டி நலன்புரிச் சங்கத் தலைவர் சிதம்பரப்பிள்ளை சிவரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் குமாரசாமி சுரேந்திரனும் சிறப்பு விருந்தினராக குறித்த சபையின் செயலாளர் கணேசன் கம்சனாதனும் கலந்து கொண்டனர்.

முன்னதாக இளந்தளிர் முன்பள்ளி முன்றலில் இருந்து சிறார்களின் பாண்ட் வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

கொடியேற்றலைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் இடம் பெற்றன.

ஆசிரியர்கள், பெற்றோர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட முன்பள்ளியின் சிறுவர்களின் பேச்சு, பாடல்கள், நடனம், தனி நடனம் என பலவகையான கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக சிறார்களால் சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலான கழிவகற்றல் தொடர்பில் விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது.

முன்பள்ளியிலிருந்து ஓய்வுபெற்று செல்லும் ஆசிரியர், உடுப்பிட்டியின் மூத்தோர்கள் மற்றும் கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கும் கௌரவிப்பு இடம்பெற்றது.











# மாணவர்களின் கல்வி மேம்பாடு பற்றி இந்திய தூதரகத்தில் கலந்துரையாடல்





(நூருல் ஹுதா உமர்)

கொழும்பில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தில் இந்திய தூதரகக் கல்விப் பிரிவுக்கான செயலாளர் சந்திப் சௌத்திரியை நளீர் பௌண்டஷன் தலைவர் மற்றும் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரான எம்.ஏ. நளீர் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கையில் உள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பிலும், குறிப்பாக உயர் கல்வி வாய்ப்புகள், புலமைப் பரிசில்கள் வழங்கல், கல்வி பரிமாற்றத் திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கல்வி துறையில் இந்திய அரசு வழங்கி வரும் புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு அதிகளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும், கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு இந்த வாய்ப்புகளை எளிதில் கிடைக்கச் செய்வதற்கான வழிமுறைகள் பற்றியும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

நளீர் பௌண்டஷன் ஊடாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட கல்வி உதவித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்தப்படவுள்ள கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து எம்.ஏ.நளீர் விளக்கமளித்ததுடன், இந்தியத் தூதரகத்தின் ஒத்துழைப்புடன் மாணவர்களுக்கு மேலும் பல கல்வி வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சந்திப் சௌத்திரி, இலங்கை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு இந்திய தூதரகம் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் எனக் குறிப்பிட்டதுடன், இரு தரப்பினருக்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான தயார் நிலையையும் வெளிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பு, மாணவர்களின் கல்வி எதிர்காலத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒரு முக்கியமான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தளம் மணல்குன்று பிரதேசத்து மக்கள் போதைப் பொருளுக்கு எதிராக போராட்டம்







(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

புத்தளம் மணல்குன்று மஸ்ஜிதுல் சலாம் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சலாம் போதைப் பொருள் எதிர்ப்பு குழுவினரின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை அடுத்து போதைப் பொருளுக்கு எதிரான எழுச்சி போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தப் போதைப் பொருள் எதிர்ப்பு எழுச்சி போராட்டத்துக்கு சர்வமதத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், முப்படையினர், சிவில் பாதுகாப்பு பிரிவினர் என சகல தரப்பினரதும் ஆதரவு பெறப்பட்டிருந்தது. மணல்குன்று, சம்மாந்தமுவை, கடையார்குளம் மற்றும் முல்லைநகர் என சகல அயல் கிராம மக்களும் இன மத பேதமின்றிக் கலந்து கொண்டனர்.

எம் ஊர், எம் இளைஞர்கள், எம் பெருமை போதை இல்லாத மணல் குன்று கிராமத்தை உருவாக்குவோம் என்ற அடிப்படையில் புத்தளம் மணல் குன்று மஸ்ஜிதுல் சலாம் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவரும் மணல்குன்று சலாம் போதைப்பொருள் எதிர்ப்பு இயக்க குழு தலைவருமான அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம் முபாஸால் சலாம் போதைப் பொருள் எதிர்ப்புப் பிரகடனம் வாசிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# கறைபடிந்த கரிநாள் டிசெம்பர் 26!



நடராஜன் ஹரன்

இலங்கைத் தீவின் கடந்த மாதத்தில் இடம் பெற்ற வெள்ளம் மண்சரிவுகள் போன்ற இயற்கை அனர்த்தங்களை நாம் சரியாக, வரும் முன்னர் கணிக்க முடியாதவர்களாவே இருக்கின்றோம் என்பது கவலைதரும் விடயமே.

வடக்குக் கிழக்கைத் தாக்கிய அந்த சுனாமி அலை தென் பகுதி நகரான காலி கோட்டைவரை தமது ஆதிக்கத்தைச் செலுத்தி காலி கோட்டை சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள சகல வர்த்தக நிலையங்களும் அழிவுக்குள்ளானது.

சுனாமி என்ற கடல் அரக்கனின் அழிவுகளை 2004 இல் கண்டு அனுபவித்து விட்டோம். எதிர் காலத்தில் இன்றைய காலநிலை மாற்றத்தல் ஏற்பட்ட போகும் இயர்கை அழிவுகளில் இருந்து மக்களின் உயிர்களை காப்பாற்றும் நடவடிக்கைகளை ஆட்சி செய்கின்ற மக்களின் அரனான அரசுகள் முன்னெடுக்க வேண்டும். இதற்கு சர்வ தேசத்தின் உதவிகளையும் பெற்றுக் கொள்வது அவசியம்.

உலகமே நத்தார் பண்டிகையில் களைகட்டி கொண்டாட்டங்கள் மலர்ந்து விட்ட நேரம். மக்கள் நள்ளிரவு ஆராதனையை முடித்து விட்டு வீடுவந்து அளவளவில் இன்புற்று காலை சிற்றுண்டிகளை பெற்றவாறு புதிய எதிர்பார்புடன் உண்டு மகிழ்ந்து கொண்டாடியிருந்தனர். உறவினர்கள் இல்லங்களை நாடி வருவதும் போவதுமென மகிழ்ச்சி வெள்ளம் தாண்டவமாடியது.

இந்துக்கள் கூட திருவெண்பாவை பூஜையை ஆலயங்களில் முடித்து விட்டு வீடுகளுக்கு வந்து கொண்டிருந்தனர். ஆண்கள் மற்றும் உளைக்கும் பெண்கள் தமது அன்றாட கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

2004 டிசெம்பர் 26 ஆம் திகதி அதாவது கிறுஸ்மஸ் தினத்துக்கு மறுநாள் காலை மக்கள் தமது இயல்பு வாழ்வுகளில் ஈடுபட்டிருந்தனர் கால நிலைகூட சீராக இருந்தது காலை 08 மணிக்குப் பின்னரான காலகட்டமே மக்களின் வாழ்வைத் தலை கீழாகப் புரட்டிப் போட்டது என்பது இன்றைய இளைஞர்களுக்கு சரித்திர நிகழ்வாக அமைந்து விட்டது.

இந்த சமுத்திரம் என்றுமில்லாதவாறு கொந்தளித்தது. சுமார் 40 முதல் 50 மீற்றர் உயரத்துக்குக் கடல் அலைகள் சுழன்று பொங்கி எழுத்தது கொடிய அரக்கனின் தோற்றத்தில் உருவெடுத்த கடற்கோள் தாமதியாது கரையோர பிரதேசங்களுக்குள் உட்புகுந்து நொடிப் பொழுதில் மக்களையும் ஏனைய உயிர் உடமைகளையும் ஈவு இரக்கமின்றி காவு கொண்டு விட்டது. இந்த கடல் பேரலையில் உயிர் தப்பிய எமது உடன் பிறாவா உறவுகள் மத்தியில் ஆறாத ரணத்தை இது ஏற்படுத்திச் சென்றுவிட்டது.

கிறுஸ்மஸ் கொண்டாட்டங்களை எதிர்நோக்கி ஆட்டம் பாட்டம் போடவிருந்த மக்களின் வீடுகளில் மரண ஓலம் பல கடற்கரை பகுதிகளில் அமைந்திருந்த வீடுகளையே காணவில்லை. வீடு வாசலுடன் தோட்டம் துரவுகளையும் நீண்டு வளர்திருந்த மரம்களையும் காணமுடியாத நிலையில் மக்களை எங்கு சென்று தேடுவது.

தெற்கு ஆசிய நாடுகள் அனைத்திலும் 85 ஆயிரம் அப்பாவி மக்கள் சில நொடிப் பொழுதில் கடல் விழுங்கிவிட்டது. கடற்கரைகளை அண்டிய பகுதிகளில் உள்ள நிலையான கட்டடங்கள் யாவும்

தொடர்ச்சி ▼

# கறைபடிந்த கரிநாள் டிசெம்பர் 26!

தொடர்ச்சி ▲

கடல் அலையால் தூக்கி எறியப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்டன.

இவ்வாறு அழிவுகளை ஏற்படுத்திய சுனாமி கடற்கோள் எவ்வாறு தோற்றம் கண்டது என நோக்குகையில் எமது இலங்கை தீவிலிருந்து சுமார் இரண்டாயிரம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுமாத்திரா தீவின் கடலுக்கு அடியில் உருவான பூகப்பத்தால் சுனாமி பேரலை தோன்றியுள்ளது அது பொங்கி எழுந்து சீறிப் பாந்ததினால் இந்தோனேசியா, தாய்லாந்து, அந்தமான், நிக்கோபர் தீவுகள் இலங்கை இந்தியா மாலைதீவு வட ஆபிரிக்கா நாடுகள் சிலவற்றின் கரையோரப் பகுதிகளை தாக்கி அளித்துள்ளது.

இலங்கை உட்பட படுமோசமாக தாக்கப்பட்ட நாடுகளில் உயிரற்ற வெற்றுடல்கள் நல்லடக்கம் செய்யப்படாமல் குவியல் குவியல்களால் பார்க்கும் இடமெல்லாம் காணப்பட்டதை நேரடியாகக் கண்டு உணர்ந்தவர்கள் கரையோர வாழ் மக்களே. இந்த மனித உடல்கள் உள்ளூர் மக்களால் சேகரிக்கப்பட்டு ஒரே புதைகுழியில் போட்டு அடக்கம் செய்யப்பட்டதுடன் ஆங்காங்கே குவியல் குவியலாக இரண்டு மூன்று தினங்களுக்குக் மேல் கிடந்த மனித உடல்கள் புல்டோசர்களால் சேகரிக்கப்பட்டு பாரிய கிடங்குள் வெட்டப்பட்டு புதைக்கப்பட்டது வரலாற்று நிகழ்வு.

சுமாத்திராவின் வடமுனை மானிலமான அச்சே முற்று முழுதுமாக அழிவுக்குள்ளாகியது. தீவுக் கூட்டங்களில் ஒன்றிணைந்த இந்தோனேசியாவில் 2004 பூகம்பத்தால் சில தீவுகள் சுமார் 20 மீற்றர் கடலுக்குள் நகர்ந்து விட்டதாகவும் இதனால் உலக வரை படத்தில் கூட சிறிய மாற்றங்கள் ஏற்படவேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் பூகற்பவியலாளர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் கடற்பேரலையால் அம்பாறை மாவட்டமே கூடுதலான உயிர் அழிவுகள் ஏற்பட்டது. அதற்கு அடுத்த படியாக காலி அம்பாந்தோட்டை மாவட்டமே உள்ளது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கணிசமான தொகையில் சுமார் பத்தாயிரத்துக்கு அதிகமானவர்கள் மாண்டு போனார்கள் சுனாமி பேரலையால் ஏற்பட்ட இழப்பு நெஞ்சை உறையவைக்கும் கொடுமையிலும் கொடுமை எனலாம்

கடற்கரை மணலில் உல்லாசமாக நடை பவனியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருந்த சிறுவர்கள் தேவாலயங்களில் ஞாயிறு நத்தார் ஆராதனையில் கலந்து கொண்டிருண்டிருந்தோர். இந்து ஆச்சிரம்ங்களில் தமது காலை அனுஷ்டானங்களில் ஈடுபட்டிருந்த சிறுவோர் முதியோர்கள் அனைவருமே அபயக் குரல் எழுப்பிய நிலையிலேயே சுனாமி பேரலை கடலுக்குள் இழுத்துச் சென்றுவிட்டது. வெற்றுடல்கள் கூட கண்டுபிடிக்கப்படாமலேயே இறுதி அஞ்சலிகளை இன்றுவரை உறவுகள் நடத்திக் கொண்டு வருகின்றார்கள்.

சுனாமி அலையானது ஒருவிநாடிக்கு இருநூறு தடவை சுழல்வதால் கடலுக்குள் இருந்து மண்ணையும் சுரிகளையும் சுருட்டி எடுத்துக் கொண்டு கரையைக் கடந்து ஊருக்குள் பிரவேசித்து விடுகின்றது.

எமது இலங்கையில் சுனாமி பேரலையானது சுமார் இருநூறு மீற்றருக்கு தமது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்தி உள்ளது.

2004 டிசம்பர் 26 கடற் கொந்தழிப்பால் அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசங்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. இதில் பெரிய நீலாவணையில் இருந்து பொத்துவில் அறுகம்பை வரையான நீண்ட அம்பாறை மாவட்டத்தின் கடற்கரை பிரதேசங்களில் நிகழ்ந்த பெரும் தொகையான மரணங்களில் சுமார் 85 வீதமான மரணங்கள் கல்முனை பிரதேசத்திலுள்ள மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக் குடி சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய ஆறு கிராமங்களிலேயே நிகழ்துள்ளன.

எஞ்சிய மரணங்கள் நிந்தவூர், அட்டாளைச் சேனை, ஒலுவில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு சின்னமுகத்துவாரம், திருக்கோவில், தம்பட்டை, தம்பிலுவில், கோமாரி, பொத்துவில் ,விநாயகபுரம், உமிரி அறுகம்பை, உல்லை ஆகிய பிரதேசங்களில் நிகழ்ந்துள்ளன. இந்த நிகழ்வில் 10500 இற்கும் மேற்பட்டோர் மாண்டு போனதாகவும் சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிக மானோர் காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டதாகவும் கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தூர இடைவெளியில் அமைந்திருந்த குடியிருப்பு மனைகள் அழிவடைந்தும் பகுதியளவில் சேதமானதாகவும் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஏ.நுஃப்மாந் தனது சுனாமி கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் கல்முனை பிரதேசத்திலுள்ள மேற்குறிப்பிட்ட ஆறு கிராமங்களும் இலங்கையின் அதிக குடிசன அடர்த்தியான பிரதேசங்களாகும் இந்தக் கிராமங்கள் யாவும் கடற்கரையில் இருந்து சமீபமாக அமைந்திருந்தமையே பேரழிவுக்குக் காரணமாகும். இவை தவிர்க்க முடியாதவையே இவை இன்று வரை இதே நிலப்பரப்பில் இருந்து வருகின்றது.

கரையோர வாழ் மக்களில் உழைப்பாளிகளை மக்கள் யாவரும் தமது நாளாந்த கடமைகளில் வீடுகளில் இருந்து ஆண்களும், பெண்களும் தத்தமது கடமைகளின் நிமிர்த்தம் வீடுகளிலிருந்து வெளியே சென்றுவிட வீடுகளில் குடும்ப பெண்கள் குழந்தைகள் முதியவர்கள் மட்டுமே எஞ்சி இருந்தனர்.

இந்த நேரத்தில் கடற்கரையைக் கடந்து கடலலை ஊருக்குள் வருகின்றது.ஓடுங்கள் ஓடுங்கள் என்ற கூக்குரல் நாற்திசைகளும் கேட்கின்றது. இதை மக்கள் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை. இளைஞர்களும் சமூக ஆர்வலர்களும் படப்பிடிப்பாளர்களும் புகைப்பட ஊடகவியலாளர்களும் வீடுகளில் இருந்து அவசர அவசரமாக கடற்கரைப் பக்கமாக விரைவாக ஓடி வேடிக்கை பார்க்கின்றார்கள். முதலாவது அலை கரையைக் கடந்து ஊருக்குள் புகுந்தது. இது அவ்வளவு பாரிய சேதங்களை ஏற்படுத்தவில்லை. சுமார் 15 நிமிட

தொடர்ச்சி ▼

# கறைபடிந்த கரிநாள் டிசெம்பர் 26!

தொடர்ச்சி ▲

இடைவெளியில் பாரிய அலை வானைத் தொடும் அளவு விரைந்து கரையை நோக்கி வந்து கொண்டிருகின்றது. வேடிக்கை பார்த்தவர்கள் கடல் அலையில் அள்ளுண்டு சென்றுவிட்டார்கள்.

வீடுகள் நீரில் அள்ளுண்டு தோணியாக மாறி மிதந்து திக்கு திசையின்றி சென்று காணாமல் போய்விட்டன. தாயின் மடியில் கைகளில் இருந்த பச்சிளம் குழந்தை கண்ணெதிரே கடலலை பறித்து சென்று கொண்டது.

எங்கும் மரண ஓலம் மக்கள் இருந்த வீடு வாசல்களை காணவில்லை. குடும்பங்கள் திசை கெட்டு பல்வேறு பக்கமும் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். கடலலையின் கோரப்பிடிக்குள் சிக்கி இறந்தவர்கள் போக ஏனையவர்கள் மதியத்துக்குப் பின்னர் மேட்டுப்பாங்கான உயந்த இடம்களில் ஒன்று கூடி செய்வதறியாது தடுமாறிய வண்ணம் யார் யாரை தேடுவது என்பது தெரியாது பிரமை பிடித்த நிலையிலேயே வட கிழக்கு கரையோர மக்கள் அன்று இருந்தனர். இதன் வலி வேதனைகள் அன்று நேரிடையாக அனுபவித்தவர்களுக்கு புரியும்.

அன்றைய சுனாமிப் பேரலையால் கடல் அலையில் அள்ளுண்டும் திக்குத்திசை தெரியாது மூச்சடைத்து மாண்டவர்களே அதிகம். ஆனால் நடுக் கடலில் நின்ற பெரிய ஆள் கடல் மீன்பிடி படகுகள் மற்றும் அதில் பயணம் செய்தவர்களும் பத்திரமாக் கரைதிருப்பியதுடன் அந்ததருனத்தில் தாம் ஆள் கடலில் மணல் திட்டுக்களை கண்டதாகவும் தமது வள்ளம் மண்ணில் தரை தட்டி சில மணி நேரங்களில் மீண்டும் நீர் மட்டம் சடுதியாக உயர்ததாகவும் அனுபவித்தவர்கள் தெரிவித்தனர்.

கடல் கரைபகுதிகலில் காணப்படும் பனை மரங்கள் அலைகள் எவ்வளவு தூரத்துக்கு மேல் எழுந்துள்ளதையும் இன்று தலை விழுந்த பனை மரங்கள் கடற்கரை பகுதிகளில் எமக்கு கண்னுாடாகக் காணும் காட்சியாக இருக்கின்றது.

மனித இனம் பேரவலம் ஒன்று நிகழ்ந்தபோது சகல விதமான விருப்பு வெறுப்புகளையும் மறந்த மனித நிலைக்கு வந்து விடுவான். இதுவே நியதியும் ஜதார்த்தமுமாகும். சுனாமி ஏற்பட்டபோது எமது நாட்டில் கொடிய யுத்தம் நிலவிய காலகட்டம் தமிழ் மக்கள் பாதுகாப்பு படையினரைக்கண்டு ஓடி ஒழிந்த காலப் பகுதியாகும்.

இதேபோல் படையினர் தமிழ் பேசும் மக்கள் எவரையும் அன்றைய காலகட்டத்தில் நம்பத்தயார் இல்லை இரு தரப்பும் இரு துருவம் ஆனால் சுனாமி அலை தாக்கி அழித்த அன்று அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கடற்கரைக்கு மிக அன்மித்ததாகவிருந்த விசேட அதிரடிப்படை முகாம் கடல் அலையால் மிக மோசமாக தாக்கப்பட்டது. படையினரையும் நிலைகுலைய வைத்ததுடன் படையினர் உடுத்த உடையுடன் கடல் நீர் தலையில் இருந்து சொட்ட சொட்ட தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு (கண்ணகி புரம் ) படைத்தளபாடங்களுடன் வந்து சேர்ந்து கண்ணகிபுரம் பாடசாலையில் தஞ்சமடைந்தனர் படையினரின் பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு தமிழ் இளைஞர்கள் அன்று பேருதவி செய்துள்ளனர்.

இதேபோன்று அன்றிரவு வீதியோரங்களிலும் ஆலயங்களிலும் உயரமான மலைகளிலும் உணவு நீரின்றி அல்லலப்பட்ட தமிழ் மக்களுக்கு உடனடியாக சமைத்த உணவுகள் வழங்கப்பட்டது. தேவையான முதலுதவிகளும் படையினரால் வழங்கப்பட்டது. இது போல அனைத்து பகுதிகளிலும் இன மத மொழி வேறுபாடு இன்றி மனிதர்களெனும் மனிதப் பண்புடன் ஒருவருக்கு மற்றையவர் உதவிக் கரம் புரிந்ததை மறக்கமுடியாத வரலாற்று உண்மை. இதுவே மனித இனத்தின் அடையாளம். சுனாமி தாக்கி அழித்த ஒருமணிநேரம் ஒவ் வொருவரும் தமது உடன் பிறப்புக்ளையும் உற்றார் உறவினர்களையும் தேடும் பணிகளிலேயே தமது அன்றைய பொழுக் கழித்தனர். இதற்கு உதாரணமாக அலைபேசிகள் சில மணி நேரங்கள் தொடர்பு எட்டமுடியாத நிலமைக்கு தள்ளப்பட்டிருத்ததும் அந்தந்த தொலைபேசி நிறுவனங்களுக்கு ஒரு புதிய அனுபவத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இத் தேடுதலானது ஒரு மாதம்வரை நீடித்ததும் வருடங்கள் கடந்தும் உள்ளது. கடலலை கொண்டு சென்றவர்கள் போக ஏனையோர் குடும்பங்களுடன் இனைந்து கொண்டனர். கடல் தாயின் மடியில் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவர்கள் இன்றுவரை கடலுக்கு அடியிலும் மண்ணில் புதையுண்டும் எம்மை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த கடற்சீற்றத்தால் கடலை நம்பி ஜீவனோபாயம் நடத்திய மீனவர்கள் அந்த சமுதாயம் பாரிய உடமை உயிர் இழப்புகளை சந்தித்துள்ளது.

இதேநேரம் நத்தார் விடுமுறையுடன் தமது உறவுகளை காண பல்வேறு பரிசுப் பொதிகளுடன் பல கனவுகளுடன் கொழும்பில் இருந்து ஹம்பாந்தோட்டைவரை சென்று தென் கரையோர புகைவண்டி என்றுமில்லாதவாறு அதிக சன நெரிசல் நிறைந்ததாக பயணித்துக் கொண்டிருந்த போது ரயில் பெரலிய என்ற இடத்தை அன்மித்த போது கடலலை ஒன்று ரயிலில் மோதியதில் பெட்டிகள் சின்னாபின்னமா-கி கடலலையில் கடலுக்குள் இழுத்துச் சென்றிருக்கின்றது.

மக்கள் கடலுடன் சங்கமமானார்கள் இந்த ரயில் விபத்தில் அதிஸ்டவசமாக ஒரு சில பேர் தப்பித்துள்ளனர் என கூறப்படுகின்றது. இதன் இறப்பு எண்ணிக்கை குறைந்தது 1700 பேர் மற்றும் அனேகமாக 2000 இற்கும் மேற்பட்டோரில் 600 உடல்களையே மீட்புக் குழுவினர் கைப்பற்றி இருந்தனர் இந்த ரயில் விபத்தே ஆசியாவில் நடந்த பாரிய பேரழிவாக கொள்ளப்படுகின்றது.

வடக்குக் கிழக்கைத் தாக்கிய அந்த சுனாமி அலை தென் பகுதி நகரான காலி கோட்டைவரை தமது ஆதிக்கத்தை செலுத்தி உள்ளது காலி கோட்டை சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள சகல வர்த்தக நிலையங்களும் அழிவுக்குள்ளானது.

எனினும் கடந்த மாதத்தில் இடம்பெற்ற வெள்ளம் மண்சரிவுகளை இன்னும் நாம் சரியாக வரும் முன்னர் கணிக்க முடியாதவர்களாவே இருக்கின்றோம் என்பது கவலைதரும் விடயமே.

இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக மனிதப் பேரவலம் ஏற்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் ஓர் ஸ்திரத் தன்மையில் பேணமுடியும் என்பது திண்ணம்.



# ஆழிப்பேரலைக்கு இன்று அகவை 21!

தெற்காசியாவை உலுக்கிய ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து இரண்டு தசாப்தங்கள் கடந்த நிலையில், மற்றுமொரு பேரிடர் 'டித்வா' என்ற பெயரில் இலங்கையை உலுக்கி இருக்கிறது.

டிக்வா பேரிடரின் உயிரிழப்புக்கள் 680. எனினும் பாதிப்புகள் 4.1 பில்லியன் டொலர் என்று கணிப்பிடப்பட்டிருக்கின்றது.

இருந்த போதிலும் ஆழிப்பேரலை சுமார் 35 ஆயிரம் பேரை காவு கொண்டது. இருந்தபோதிலும் இவ்வாறான பாதிப்பு ஏற்படவில்லை என்று புள்ளி விவரங்களிலிருந்து தெரிகின்றது. அதாவது ஆழிப்பேரலையை விட டித்வா பேரிடர் பேருடன் மூன்று மடங்கு பாதிப்பை இலங்கைக்கு தந்து விட்டு சென்றிருக்கின்றது.

ஆழிப்பேரலை, பெயரில் இருக்கும் அழகிய லைப் போல் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இந்த அலைகள் கரையில் நிகழ்த்திவிட்டுச் சென்ற தாக்கங்கள் அழகியல் அல்ல, துன்பியல் அதிர்ச்சி அலைகள்.

கடலின் கீழ் மட்டத்தில் ஏற்படும் நிலநடுக்கம் தான் அலைகள் உயர எழுந்து கரைகளை விழுங்கும் ஆழிப்பேரலையாகிறது.

அப்படி 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இந்தோனேஷியா அருகே இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக சுனாமி அலைகள் எழும்பி தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா, இலங்கை, இந்தியா என அனைத்து தெற்காசிய நாடுகளின் கடலோரப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தியது.

ரிக்டர் அளவுகோலில் 9.3 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கம்தான் வரலாற்றில் இரண்டாவது மிகப்பெரிய நிலநடுக்கமாகப் பதிவு செய்யப்பட்டது. நிலநடுக்கம் உருவாக்கிய ஆழிப்பேரலை இரண்டு லட்சத்துக்கும் அதிகமானவர்களைக் காவு கொண்டது.

2004 டிசெம்பர் 26 ஆம் திகதி தெற்காசியாவை உலுக்கிய ஆழிப்பேரலைக்கு இன்று வெள்ளிக்கிழமை அகவை 21 ஆகின்றது.

அதனையொட்டி உலகெங்கிலும் ஆழிப்பேரலை தின வைபவங்கள் நடத்த பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் சுமார் 35 ஆயிரம் பேரைக் காவுகொண்ட ஆழிப்பேரலை அம்பாறை மாவட்டத்தில் மட்டும் அதிகூடிய 5000 பேரைக் காவு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை முன்னிட்டுக் கடலோரமெங்கும் ஆத்மார்த்த அஞ்சலி பிரார்த்தனை செலுத்தப் பொது அமைப்புகள் மற்றும் மக்கள் தயாராகிவருகின்றனர்.

இந்தியாவில் பலியானோர் எண்ணிக்கை 6400. தமிழகத்தில் மட்டும் 2758 பேர் இறந்தனர்.

வீடுகளையும் வாழ்வாதாரங்களையும் உப்பு அலைகள் அடித்துச்சென்றன. அது மட்டுமல்லாமல் 50 சதவிகிதம் அளவுக்கான பொருளாதார இழப்பீட்டையும் இலங்கை சந்தித்தது.

சில அழியாத சுவடுகள் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் மனதை விட்டு அகலாமல் நினைவில் இருக்கும்.

அந்த ஆழிப்பேரலை சுவடுகளுடன் டித்வா பேரிடர் சுவடுகளும் மனித மனங்களில் ஊழி உள்ளவரை அகலாதிருக்கும் எனலாம்.

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு நிருபர்.**



# ஆழிப்பேரலை நினைவு தினம் கட்டைக்காடு நினைவாலயத்தில்





**(வடமராட்சி விசேட நிருபர்)**

ஆழிப்பேரலை இடம்பெற்று 21 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென். மேரிஸ் கடற் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கட்டைக்காடு சென். மேரிஸ் சுனாமி நினைவாலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை காலை 9:30 மணியளவில் இடம்பெற்றது.

பொது நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இதில் மலர் மாலையைப் பருத்தித் துறை பிரதேச சபை உறுப்பினர் பி.அலஸ்ரன் அணிவித்ததுடன் அஞ்சலி நிகழ்வை உயிரிழந்தவர்கள் சார்பாக உறவினர் ஒருவர் ஆரம்பித்து வைக்க அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றது.

தொடர்ந்து தேசியக் கொடியை முள்ளியான் கிராம அலுவலர் ஏற்றியதை தொடர்ந்து பொது ஈகைச் சுடரை உயிரிழந்தவர்கள் சார்பாக உறவினர் ஒருவர் ஏற்றிவைக்க சம நேரத்தில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து அஞ்சலி உரையைக் கட்டைக்காடு கப்பலேந்திமாதா ஆலய பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் நிகழ்த்தினார்.

இந்த நினைவேந்தலில் சுனாமியால் காவுகொள்ளப்பட்டவர்களது உறவுகள், பொது அமைப்பு பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்தக் கிராமத்தில் 40 இற்கும் மேற்பட்டோர் சுனாமிப் பேரவையில் காவு கொள்ளப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுனாமி நினைவு தினம் வவுனியாவில்!


















**(கி.வசந்தன்)**

சுனாமிபேரவலத்தின்21ஆவதுஆண்டு நினைவு தினம் இன்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

பூந்தோட்டத்தில் அமைந்துள்ள இலங்கையின் முதலாவது சுனாமி நினைவாலயத்தில் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் நினைவு கூறப்பட்டதோடு டித்வா புயலில் பாதிக்கப்பட்டவர்களும் இதன்போது நினைவு கூறப்பட்டிருந்தனர்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவால் சுனாமி பேரவலத்தில் உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலி சுடர் ஏற்றப்பட்டது. டித்வா புயலால் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி சுடரை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்திய லிங்கம் ஏற்றி வைத்திருந்தார்.

இதனை அடுத்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதோடு நினைவுத் தூபிக்கு மலர் மாலை மற்றும் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அங்கு கலந்து கொண்டிருந்தவர்களால் அஞ்சலி தீபம் ஏற்றப்பட்டது.

# உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் இன்று நடந்த நினைவேந்தல் நிகழ்வு!












**(எஸ்.நிதர்ஷன்)**

சுனாமிப் பேரலையால் யாழ். மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோரைக் காவு கொண்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 21 ஆவது சுனாமி நினைவேந்தலின் பிரதான நினைவேந்தல் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9:05 மணியளவில் பொது நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமானது.

இதில் மலர் மாலையை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராம சேவையாளர் தோமஸ் யூட் மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைக்க அதனை தொடர்ந்து வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் தங்கவேல் தங்கரூபன் உட்பட அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பு பிரதிநிதிகள், ஆகியோர் அணிவித்து வைக்க தொடர்ந்து மலர் அஞ்சலி இடம்பெற்றது.

அடுத்து தேசியக் கொடியை மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏற்றியதைத் தொடர்ந்து பொது ஈகைசுடரை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராமசேவகர் தோமஸ் யூட் ஏற்றிவைக்க சம நேரத்தில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை நினைவாலயத்தில் காவுகொள்ளப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தூபிகள் நினைவுத் தூண்கள் முன்னிலையில் காவு கொள்ளப்பட்டோருக்கு விருப்பமான உணவுகளை படைத்திருந்த உறவுகள் கதறி அழுதனர். அவர்களது அழுகுரல் குழுமியிருந்தவர்களை நிலைகுலைய வைத்தது மட்டுமல்லாமல் வானத்தையே அதிர வைத்தது.

தொடர்ந்து அஞ்சலி உரைகளை வடமராட்சி கிழக்கு தலைமை கிராம சேவகர் செபமாலை தோமஸ்யூட், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இன்றைய நினைவேந்தலில் சுனாமியால் காவுகொள்ளப்பட்டவர்களது உறவுகள், பொது அமைப்பு பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பல நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.



# திருமலை மாவட்ட செயலகத்தில் சுனாமி நினைவேந்தல் நிகழ்வு!

(எஸ்.கீதபொன்கலன்)

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமிப் பேரழிவின் 21 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரை நாடு முழுவதும் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டு, சுனாமி மற்றும் பிற இயற்கை பேரழிவுகளால் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

மேலும், டிசெம்பர் 26 ஆம் திகதி இலங்கையில் தேசிய பாதுகாப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுவதாகவும், சுனாமி உள்ளிட்ட இயற்கை பேரழிவுகளில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நோக்கிலும், பேரழிவு தயார்நிலை மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கிலும் இந்நாள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அரச அதிபர் இதன்போது தெரிவித்தார்.

இதன்போது மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# புதுக்குடியிருப்பில் சுனாமி நினைவேந்தல்!







(பா. சதீசன்)

ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட மக்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை 8.05 மணியளவில் புதுக்குடியிருப்பில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையுடன் இணைந்து சுனாமியால் உயிர்நீத்த ஆயிரக்கணக்கானவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு ஐயனார் கோவிலடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவாலயத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சுனாமியால் பறிபோன மூன்று பிள்ளைகளின் தாயாரான மைக்கல் றெசிலின் ராணியால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏனையவர்கள் சுடர் ஏற்றினர். நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் த.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மதகுருமார்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், வினோநோதாரலிங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களான சி.குகனேசன், சி.வேதவனம், வர்த்தக சங்கத்தினர், பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆழிப்பேரலையால் உயிரிழந்த கள்ளப்பாடு மாணவருக்கு அஞ்சலி



**(பா.சதீசன்)**

கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும்போது ஆழிப்பேரலையால் உயிரிழந்த 68 மாணவர்களுக்கு இன்று கள்ளப் பாடு பாடசாலையில் அஞ்சலி செலுத் தப்பட்டது.

அந்தவகையில் கள்ளப்பாடு அரசி னர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ம.சுரேஸ்தரன் தலைமையில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப் பட்டது.

அந்தவகையில் உயிர்நீத்த மாண வர்களின் உறவினர்கள் பொதுச்சுடரை ஏற்றி நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்துவைத்தனர்.

தொடர்ந்து உயிர் நீத்த மாண வர்களின் நினைவாக கள்ளப்பாடு பாடசாலை வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ள தூபிக்கு மலர் தூவி தீபங்க ளேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் துரைராசா ரவிகரன், உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும், உறவினர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், நலன்விரும்பி கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணீரில் மிதந்தது கள்ளப்பாடு!



**(விஜயரத்தினம் சரவணன்)**

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற் பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் முல்லைத்தீவு - கள்ளப்பாட்டைச் சேர்ந்த பொருந்திரளான மக்கள் உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று கள்ளப்படு உதயம் விளை யாட்டுக்கழக மைதானத்தில் பிரத்தியேக மாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப் பட்டது.

அந்தவகையில் ஈகைச்சுடர் மற்றும் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து ஆழிப்பேரலையின்போது உயிரிழந்த உறவுகளின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவப்பட்டுச் சுடரேற்றப் பட்டது. ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து தமது அஞ்சலிகளை உணர்வெழுச்சியுடன் மேற்கொண்டனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப் பற்று பிரதேச சபைச் செயலாளர் திரு மதி இராஜஜோகினி ஜெயக்குமார், ஒட்டு சுட்டான் பிரதேச காணி உத்தியோ கத்தர் சோதிநாதன் சேந்தன், கிராம உத்தியோகத்தர்கள், கள்ளப்பாடு கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், கள்ளப் பாடு கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவிக்காமல் தமிழ்நாட்டில் மத அரசியல் செய்கின்றது தி.மு.க.

## அண்ணாமலை தெரிவிப்பு



இந்து பண்டிகைகளுக்கு மட்டும் வாழ்த்து தெரிவிக்காமல் தமிழ்நாட்டில் மத அரசியல் செய்வது தி.மு.க. தான் என பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 101 ஆவது பிறந்த நாள் முன்னிட்டு அவரின் சாதனைகள் குறித்த கருத்தரங்கு கோவை நவ இந்தியா பகுதியில் அமைந்துள்ள தனியார் கலையரங்கில் நேற்று மாலை நடந்தது. இதில் பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கலந்து கொண்டு பேசினார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழ்நாட்டில் அரசு பஸ்களில் அதிகம் விபத்துக்கள் ஏற்படுவது மிகவும் கவலையளிக்கிறது. பஸ்களின் தரத்தை முறையாக அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

நத்தார் விழாவில் தாக்குதல் நடத்தப்படும் சம்பவம் மிகப்பெரிய குற்றம். விரும்பத்தகாத வருத்தப்படக்கூடிய செயல்கள் ஆகும். இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் பிரதமர் டில்லியில் சர்ச் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளார். அதை விட நாட்டிற்கு என்ன செய்தியை பிரதமர் கூற முடியும். தேர்தலுக்கு 3 மாதங்கள் உள்ளதால் தேசிய ஜனநாயக கூட்டணியில் எந்த கட்சிகள் இடம் பெறுவார்கள் என்பதை பொருத்திருந்து பார்க்க வேண்டும். வலிமையாக தேர்தல் களத்தில் பெரியளவில் வெற்றி பெறுவதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் பார்த்து கொண்டுள்ளோம்.

‘எஸ்.ஐ.ஆர்’ பணிகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 6 கோடியே 41 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருக்கும் போது, சில தவறுகள் நடப்பது சகஜம்தான். நியாமானவர்களை சேர்க்க வேண்டும் என்றால் அவசியம் சேர்த்து கொள்ள வேண்டும். தி.மு.க. கடைசி 100 நாள்கள் ஆட்சியில் இருப்பார்கள். அதற்கு பின் தூக்கி ஏறிப்படுவது உறுதி. இந்து பண்டிகைகளுக்கு மட்டும் வாழ்த்து தெரிவிக்காமல் தமிழ்நாட்டில் மத அரசியல் செய்வது தி.மு.க. தான்.

ஆண்டுதோறும் கன்னியாகுமரியில் அரண்மனை கிறிஸ்துமஸ் விழா நடப்பது வழக்கம். இந்தாண்டு தி.மு.க. செல்லவில்லை. த.வெ.க-வை அழைத்துள்ளதால் நாங்கள் பங்கேற்கவில்லை என்கின்றனர். பா.ஜ.க கிறிஸ்துமஸ், ஈகை பண்டிகை போன்ற அனைத்து மத பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவிக்கிறோம். கிறிஸ்துமஸ் பண்டிகையில் தாக்குதல் நடத்தியதையும் கண்டிக்கிறோம். எனவே பா.ஜ.க. மத அரசியல் செய்வதில்லை.

பா.ஜ.க. படிப்படியாக தலைவர்கள் உழைத்து பாக முகவர்கள் எண்ணிக்கையை 63 ஆயிரமாக உயர்த்தியுள்ளனர். தேர்தல் ஆணைய இணையதளத்தில் 5,000 எண்ணிக்கை குறைவாக உள்ளது. தே.மு.தி.க, அ.ம.மு.க, அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் மீதும் மரியாதை உள்ளது. யாரும் அவசரப்பட்டு எதுவும் பேச வேண்டிய கட்டாயம், அவசியம் இல்லை.” என்று தெரிவித்துள்ளார்.

# 10 தொகுதிகளுக்கு கூட விஜய்யால் வேட்பாளர்களை சொல்ல முடியாது

## நயினார் நாகேந்திரன் தெரிவிப்பு

த.வெ.கவில் அரசியல் கட்சிக்கான கட்டமைப்பே கிடையாது எனவும் 234 தொகுதிகள் உள்ள நிலையில் விஜய்யால் 10 தொகுதிகளுக்கு கூட வேட்பாளர்களின் பெயரை சொல்ல முடியாது என்றும் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தொகுதிக்கு உட்பட்ட வரட்டனப்பள்ளி ஊராட்சியில் பா.ஜ.க. சார்பில் நடந்த சிறப்பு கிராமசபை கூட்டத்தில் அக்கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்று பேசினார். தொடர்ந்து, குந்தாரப்பள்ளியில் உள்ள பா.ஜ.க. அலுவலகத்தில் அவர் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியை, மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் சந்தித்து பேசினார்.

இதில், தற்போது தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தொடர்பாக பேசப்பட்டது. கட்சிகளுக்கு இட ஒதுக்கீடு தொடர்பாக பேசவில்லை. தற்போது ஓ.பி.எஸ், தினகரன் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியே



உள்ளனர். தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்கள் இருக்கின்றன. அரசியலில் 3 மாதங்களில் எதுவும் நடக்கலாம். 24 மணி நேரத்தில் கூட கூட்டணியில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அரசியலில் மாற்றங்கள் எந்த நேரத்திலும் நடக்கலாம்.

தி.மு.கவுக்கும், த.வெ.கவுக்கும் தான் விஜய் போட்டி என்கிறார். இது சினிமா அல்ல. 234 தொகுதிகளில் உள்ள நிலையில், விஜய்யால், தற்போது 10 வேட்பாளர்கள் பெயரை சொல்ல முடியுமா. கட்சிக்கு பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் இருக்க வேண்டும். தவெகவில் கட்சிக்கான கட்டமைப்பே கிடையாது.தி.மு.க. அரசு மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாத அரசாக உள்ளது. பெட்ரோல், டீசல், எரிவாயு விலையை குறைப்பதாக கூறினார்கள், ஆனால் செய்யவில்லை தி.மு.க. தேர்தல் வாக்குறுதியில் பெரும்பாலான வற்றை நிறைவேற்றவில்லை. இப் போது, 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் குறித்து பொதுமக்களிடம் தவறான கருத்துகளை பரப்பி வரு கின்றனர். 100 நாட்கள் வேலை வாய்ப்பு திட்டம் 125 நாள்களாக பிரத மர் மோடி உயர்த்தி உள்ளார்." என்று தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்தும் ட்ரம்பின் திட்டம்: ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளதாக ஜெலென்ஸ்கி தகவல்



உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் நிறுத்தம் தொடர்பில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் முன்மொழிந்துள்ள 20 அம்ச அமைதி திட்டம் குறித்த முக்கிய தகவலை ஜெலென்ஸ்கி வெளியிட்டுள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வர, ட்ரம்ப் தலைமையிலான குழு 20 அம்ச அமைதி திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

இதற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு அமைதி பேச்சு வார்த்தைகளும் கைகூடாத நிலையில், ட்ரம்பின் இந்த முன்முயற்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

புளோரிடாவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைக்கு பின் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, போர் நிறுத்தம் தொடர்பில் அமெரிக்கா மற்றும் உக்ரைன் இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டு இருப்பதாகவும், அமெரிக்காவின் புதிய 20 அம்ச அமைதித் திட்டத்தின் முக்கிய விவரங்களையும் வெளியிட்டுள்ளார்.

அதன்படி, உக்ரைன் இராணுவம் நிலைகொண்டுள்ள கிழக்குப் பகுதியிலிருந்து குறிப்பிட்ட தூரம் இராணுவம் பின் வாங்கவும், அப்பகுதியை இராணுவமற்ற வலயங்களாக உருவாக்க முன்வந்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அதே சமயம், ரஷ்யாவும் தனது படைகளை அதே தூரம் பின்வாங்கச் செய்ய வேண்டும் என்றும் குறிப் பிட்டார்.

அத்துடன், இந்த பகுதி பொருளாதார மையமாக மாற்றப்பட்டு அவற்றை உக்ரைன் பொலிஸார் நிர்வகிப்பார்கள் என்றும், இதன் எல்லைகளை சர்வதேச படைகள் கண்காணிக்கும் என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் இறையாண்மையை இந்த புதிய வரைவு பாதுகாப்பதாக சுட்டிக் காட்டிய ஜெலென்ஸ்கி, உக்ரைன் தங்களது அமைதி காலத்தில் சுமார் 8 லட்சம் இராணுவ வீரர்களை பராமரிக்கும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான காலக்கெடுவை நிர்ணயம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த அமைதி திட்டம் குறித்து உக்ரைன் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் ரஷ்யா இந்த அமைதி முயற்சியைத் தடுக்க முயன்றால் அமெரிக்கா அதிகப்படியான ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கிப் பதிலடி கொடுப்பதோடு பொருளாதாரத் தடைகளையும் விதிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. - அ.தி.மு.க கூட்டணியை தோற்கடிப்பதே எங்களது நோக்கம்

## பெ.சண்முகம் உறுதி



சட்டப்பேரவைத் தேர்தலில் அதிக தொகுதிகளில் போட்டியிடுவது தான் எங்களது நோக்கம் என மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டம் கீழ வெண்மணி தியாகிகள் நினைவிடத்தில் நேற்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பின், செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு புதிய சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற்று, பழைய நடைமுறையே தொடர வேண்டும். இல்லையெனில், கிராமப்புறங்களில் தொழிலாளர்கள் புலம்பெயர்வு, தற்கொலை அதிகரிக்கும்.

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணி மூலம் ஒரு கோடிவாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதில், 27 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர் என்பது நம் பக்கூடியது அல்ல. இடமாற்றம், முகவரி மாற்றம் என காரணம் காட்டி பெயர்கள் நீக்கப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட சம்பா, தாளடி பயிர்களுக்கு ஏக்கருக்கு 8,000 இந்திய ரூபா இழப்பீடு ஏற்புடையது அல்ல. உற்பத்தி செலவுக்கு ஏற்றார்போல இழப்பீட்டுத் தொகையை உரிய காலத்தில் தமிழக அரசு வழங்க வேண்டும்.

பா.ஜ.க - அ.தி.மு.க. கூட்டணியை தோற்கடிப்பதே 2026 தேர்தலில் எங்களின் நோக்கம். இதற்கு முன் நாங்கள் 20 முதல் 22 தொகுதிகள் வரை போட்டியிட்டுள்ளோம். எனவே, அதிகமான தொகுதிகளில் போட்டியிடுவதும் எங்களின் நோக்கம்தான். அதற்கான முயற்சியை உரிய நேரத்தில் மேற்கொள்வோம். தமிழகத்தில் கடந்த காலத்தைவிட போதைப் பொருட்களின் புழக்கம் அதிகம் உள்ளதால், அதை முற்றிலும் ஒழிக்க வேண்டும். அதன் பின்னணியில் பெரிய மனிதர்கள் யார் இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.





# பிரித்தானிய ஏவுகணையை பயன்படுத்திய உக்ரைன்: ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது தாக்குதல்

ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை பிரித்தானிய ஏவுகணைகள் மூலம் உக்ரைன் தாக்கி அழித்துள்ளது.

ரஷ்யா மீதான தனது நீண்ட தூரத் தாக்குதல் நடவடிக்கையை உக்ரைன் தற்போது தீவிரப்படுத்தியுள்ளது.

அதன் ஒரு பகுதியாக ரஷ்யாவின் ரோஸ்டோவ் பகுதியில் அமைந்துள்ள நோவோஷாக்டின்ஸ்க் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது உக்ரைன் தனது நீண்ட தூரத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு உக்ரைனிய ராணுவம் பிரித்தானியாவின் ஸ்டார்ம் ஷேடோ ஏவுகணைகளை பயன்படுத்தியுள்ளது.

உக்ரைனின் இந்த தாக்குதலின் போது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பல பகுதிகளில் வெடிப்புகள் ஏற்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனிய படைகளால் தாக்கப்பட்ட இந்த நோவோஷாக்டின்ஸ்க் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையானது தெற்கு ரஷ்யாவில் உள்ள ரஷ்ய படைகளுக்கு தேவையான எரிப்பொருளை வழங்கும் முக்கிய தளமாகும்.








# தைவானில் 6.1 ரிக்டர் நிலநடுக்கம் வீதியில் தஞ்சமடைந்த பொதுமக்கள்

தைவானில் 6.1 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தைவான் நாட்டின் தென்கிழக்கு பகுதியான தைதுங் கடலோர கவுண்டி பகுதியில் இந்த சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தை தொடர்ந்து பொதுமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

மேலும் நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டடங்கள், மற்றும் வணிக வளாகங்கள் பலமாக குலுங்கின, மேலும் கடைகளில் விற்பனைக்கான வைக்கப்பட்டிருந்த பொருள்கள் தரையில் விழுந்து சிதறின. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரங்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

## கனடாவில் மீளப்பெறப்படும் போர்ஷ் நிறுவன வாகனங்கள்

கனடாவில் போர்ஷ் நிறுவனம் 25,000 இற்கும் மேற்பட்ட வாகனங்களை மீளப் பெற்றுக் கொள்வதாக அறிவித்தல் விடுத்துள்ளது.

பின்புற கேமரா படம் திரையில் தோன்றாததால் 02▸



# இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைக்கு கனடா உள்ளிட்ட 14 நாடுகள் அதிருப்தி

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் 19 புதிய குடியேற்றங்களை அனுமதித்த இஸ்ரேலின் முடிவை, பிரித்தானியா, கனடா, டென்மார்க், பிரான்ஸ் உள்ளிட்ட 14 நாடுகள் கடுமையாக கண்டித்துள்ளன.

இந்த நடவடிக்கை சர்வதேச சட்டத்திற்கு முரணானது என்றும் காசாவில் நிலவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தையும், பிராந்தியத்தின் நீண்டகால அமைதி மற்றும் பாதுகாப்பையும் ஆபத்தில் ஆழ்த்துவதாகவும் அவை எச்சரித்துள்ளன.

பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, ஜப்பான், மால்டா, நெதர்லாந்து, நார்வே, ஸ்பெயின் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில்,

"மேற்கு கரையில் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை 19 புதிய குடியேற்றங்களை அனுமதித்ததை நாங்கள் கண்டிக்கிறோம்." என தெரிவித்துள்ளன.

02▸

# உள்ளூர் பொருள்களை கொள்வனவு செய்யுமாறு ஒன்டாறியோ முதல்வர் டக் ஃபோர்ட் கோரிக்கை

பண்டிகைக் காலத்தில் கனடியர்களை உள்ளூர் பொருள்களை கொள்வனவு செய்வதனை ஊக்குவிக்கும் வகையில் ஒன்டாறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் காணொலி வெளியிட்டுள்ளார்.

பாரம்பரிய கனடிய இனிப்புகளை சுவைக்கும் காணொலியை அவர் எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

புதன்கிழமை வெளியிடப்பட்ட அந்த காணொலியில், ஃபோர்டு பல வேறு இனிப்புகளை சுவைத்து, அவற்றை அடையாளம் காண முயற்சிக்கிறார்.

காணொலியின் இறுதியில், "பண்டிகைக் காலத்தில் அனைவரும் கனடிய இனிப்புகளை ருசித்து மகிழ்வார்கள் என்று நம்புகிறேன்" என்று ஃபோர்ட் கூறினார். "உள்ளூர் கடைகளை இந்த பண்டிகைக் காலத்தில் ஆதரிக்க மறக்காதீர்கள்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

"கனடிய பொருள்களை வாங்குவதைவிட சுவையானது வேறொன்றும் இல்லை. இந்த நத்தாரில் குடும்பத்தினருடனும் அன்புக்குரியவர்களுடனும் கொண்டாடும்போது சிறந்த கனடிய இனிப்புகளை முயற்சிக்கவும் என தெரிவித்தார்.

இந்த காணொலி, அமெரிக்காவுடனான வர்த்தக போரின் போது ஃபோர்டின் தொடர்ச்சியான செயல்பாடுகளுக்கு மத்தியில் வெளியாகியுள்ளது.








# 20 வயது இந்திய மாணவர் கனடாவில் சுட்டுக்கொலை

## இந்திய தூதரகம் கடும் கண்டனம்

கனடாவில் 20 வயதான இந்திய மாணவன் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கனடா - ஒட்டவா ஹைலேண்ட் கிரீக் டிரெயில் பகுதியில் உள்ள டொரோண்டோ ஸ்காா்பரோ பல்கலைக்கழகம் அருகே, கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் மாணவர் ஒருவர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து பொலிஸார் அங்கு விரைந்து சென்று பார்த்தபோது, அந்த மாணவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தமை தெரியவந்தது.

தொடர்ந்து பொலிஸார் நடத்திய விசாரணையில், உயிரிழந்த மாணவன் சிவாங்க் அவாஸ்தி (வயது 20) என்பதும், அவர் இந்தியாவை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது.

அவர் மீது துப்பாக்கி சூடு நடத்திய நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிய நிலையில், பொலிஸார் குற்றவாளியை தீவிரமாக தேடி வருகின்றனர்.

உயிரிழந்த மாணவரின் குடும்பத்தினருடன் தொடர்பில் உள்ளதாகவும், மாணவரின் உடலை சொந்த ஊருக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய மாணவர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு கனடாவில் உள்ள இந்திய தூதரகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து ஏற்படும் ஆபத்து அதிகரிக்கும் என்று காரணம் கூறப்பட்டுள்ளது.

சில வாகனங்களில் மென்பொருள் பிரச்சினையால் பின்புற கேமரா படம் திரையில் தோன்றாமல் போகலாம் என்று அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்புற கேமரா படம் தோன்றாதது, வாகனத்தை பின்னால் செலுத்தும்போது ஓட்டுநரின் பின்புற பார்வையைக் குறைக்கும்.

இது விபத்து ஆபத்தை அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மொடல்கள்:

போர்ஷ் 911 கரேரா (Porsche 911 Carrera), மொடல் ஆண்டுகள் 2020-2025

போர்ஷ் 911 டர்போ (Porsche 911 Turbo), மொடல் ஆண்டுகள் 2020-2025

போர்ஷ் கயென் (Porsche Cayenne), மொடல் ஆண்டுகள் 2019-2025

போர்ஷ் பனாமெரா (Porsche Panamera), மொடல் ஆண்டுகள் 2024-2025

போர்ஷ் டெய்கான் (Porsche Taycan), மொடல் ஆண்டுகள் 2020-2025

கனடா விதிமுறைகளின்படி, வாகனத்தை 'ரிவர்ஸ் கியரில்' போடும் போது பின்புற 'கேமரா' படம் கட்டாயம் திரையில் தோன்ற வேண்டும். போர்ஷ் நிறுவனம் பாதிக்கப்பட்ட உரிமையாளர்களுக்கு அஞ்சல் மூலம் அறிவித்து, வாகனத்தை விநியோகத்தரிடம் கொண்டு சென்று ஓட்டுநர் உதவி அமைப்பின் கட்டுப்பாட்டு யூனிட் மென்பொருளை இலவசமாக புதுப்பிக்குமாறு அறிவுறுத்தும்.

## இஸ்ரேலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், எந்தவிதமான இணைப்பையும் மற்றும் குடியேற்ற விரிவாக்கத்தையும் தாங்கள் எதிர்ப்பதாகக் கூறிய நாடுகள், இந்த முடிவை உடனடியாகத் திரும்பப் பெற இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளன.

இரு - நாடுகள் தீர்வு அடிப்படையில் முழுமையான, நியாயமான மற்றும் நிலையான அமைதிக்கான தங்களின் உறுதிப்பாட்டையும் அவை மீண்டும் உறுதிப்படுத்தின.

இதற்கு பதிலளித்த இஸ்ரேல், இந்த விமர்சனங்களை பாகுபாடு எனக் கூறியுள்ளது.

"யூதர்கள் இஸ்ரேல் நிலத்தில் வாழும் உரிமையை வெளிநாட்டு அரசுகள் கட்டுப்படுத்த முடியாது; இப்படிப்பட்ட அழைப்புகள் நெறியியல் ரீதியாக தவறானதும் யூதர்களுக்கு எதிரான பாகுபாடுமாகும்." என வெளிநாட்டுத் துறை அமைச்சர் கிடியோன் சார் தெரிவித்தார்.

இதற்கிடையில், இஸ்ரேலின் கடுமையான வலதுசாரி நிதியமைச்சர் பெஸலேல் ஸ்மோட்ரிச், இந்த குடியேற்றத் திட்டம் எதிர்கால பாலஸ்தீன நாடு உருவாவதைத் தடுக்கவே என வெளிப்படையாக கூறியுள்ளார்.

2022 இறுதியில் அரசு பொறுப்பேற்றதிலிருந்து 69 புதிய குடியேற்றங்கள் கட்டட அனுமதி பெற்றதாக அல்லது பின்னோக்கி சட்டபூர்வமாக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் குடியேற்ற விரிவாக்கம் 2017க்கு பிந்தைய மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளதாகவும், இது இஸ்ரேலிய - பாலஸ்தீன அமைதி ஒப்பந்தத்திற்கு முக்கிய தடையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, இந்த சட்டவிரோத கட்டுமானங்கள்பாலஸ்தீனர்களுக்கான தொடர்ச்சியான நிலப்பரப்பை சுருக்கி, சுயாதீன பாலஸ்தீன நாடு உருவாவதை கடுமையாக பாதிப்பதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.




# நத்தார் தினத்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் பொலிஸ் வாகனம் மோதியதில் பெண் மரணம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள சர்ரே நகரின் செவரான் எரிபொருள் நிலையத்தில், நத்தார் தினமன்று பொலிஸ் வாகனம் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக சுயாதீன கண்காணிப்பு அமைப்பு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

காலை சுமார் 6 மணியளவில் செவரான் எரிபொருள் நிலையத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த சர்ரே பொலிஸ் சேவையின் உறுப்பினரின் வாகனம், பாதசாரியான அந்தப் பெண்ணை மோதியுள்ளது.

பொலிஸ் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது கடுமையான காயங்களுக்கு வழிவகுக்கும் சம்பவங்கள் அனைத்தையும் விசாரிக்கும் விசாரணைக்குழு, இந்த சம்பவம் தொடர்பான விசாரணை ஆரம்ப கட்டத்திலேயே இருப்பதாக தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்திற்கு இரண்டு நோயாளர் காவுவண்டிகள் அனுப்பப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அங்கு முதலுதவி அளிக்கப்பட்டதுடன், தீவிர நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இருப்பினும், அவர் உயிரிழந்துள்ளார் என பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. வியாழக்கிழமை பிற்பகலில் வெளியிடப்பட்ட குறுகிய அறிக்கையில், சற்றி பொலிஸ் சேவை அந்தப் பெண் "துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்" என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

சுயாதீன விசாரணை நடைமுறைகள் நடைபெற்று வரும் நிலையில், மேலதிக தகவல்களை வழங்க இயலாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் அடையாளம் குறித்து எந்த விவரங்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த சம்பவத்தை கண்ட சாட்சிகள் இருந்தால், 1-855-446-8477 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

